உளி- 1 | ஓசை-56 | அக்டோபர்-2021 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

ஆசிரியர் : ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
மதன் குமார்

அட்டைப்படம் :
ஷெண்பா

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

இணையதள முகவரி :
www.padaipPu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர்,
தமிழ்நாடு,
இந்தியா.
607002
admin@padaippu.com
✆94893 75575

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| சரண்யாசத்தியநாராயணன் | - 4 |
| சுமைல் ஹரீஸ் | - 5 |
| கனியமுதுஅமுதமொழி | - 6 |
| குபோதினி | - 7 |
| ஆனந்தகுமார் | - 8 |
| பிரபுசங்கர் க | - 9 |
| மகேஷ் சிபி | - 10 |
| மழைக்குருவி | - 11 |
| கதிரவன் வி | - 11 |
| பெண்ணியம் செல்வகுமாரி | - 12 |
| லக்ஷ்மி | - 13 |
| ஐ.தர்மசிங் | - 14 |
| நேசன் மகதி | - 14 |
| கவி. கோ. பிரியதர்ஷினி | - 15 |
| சௌவி | - 16 |
| அன்ரனி சாள்ஸ் | - 17 |
| ப.தனஞ்ஜெயன் | - 18 |
| ஷப்ரா இல்முத்தீன் | - 19 |
| கிறிஸ்டினா அருள்மொழி | - 20 |
| மணி அமரன் | - 21 |
| தங்க.ஜெயபால்(ஜோதி) | - 22 |
| சுயம்பு | - 23 |
| சந்துரு | - 24 |
| ரிஸ்கா முக்தார் | - 25 |
| குமரன்விஜி | - 26 |
| உஸ்மான் | - 27 |
| காசாவயல் கண்ணன் | - 28 |
| வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் | - 29 |
| அலர்மேல்மங்கை | - 29 |
| மா.காளிதாஸ் | - 30 |
| கோ. பாரதிமோகன் | - 31 |
| நித்யா சபரி | - 31 |
| பூங்கோதை கனகராஜன் | - 31 |
| ரா.ராஜசேகர் | - 32 |
| காயத்ரி ராஜசேகர் | - 32 |
| முகமது பாட்சா | - 33 |
| தங்கேஸ் | - 33 |
| சிவக்குமார் | - 34 |
| பிருந்தா சாரதி | - 35 |
| தி.கலையரசி | - 36 |
| தீபிகா நடராஜன் | - 37 |
| சம்பத் கிருஷ்ண குமார் | - 37 |
| ஃபஷ்றி | - 37 |
| ப்ரியா பாஸ்கரன் | - 38 |
| அழ. இரஜினிகாந்தன் | - 38 |
| ராம்பெரியசாமி | - 39 |



உன் பிரிவென்பது
பிடித்த பாடலை கேட்டுக்கொண்டிருக்கையில்
ஏற்படும் மின்தடை..
பேசிக்கொண்டிருக்கையிலேயே
தொடர்பு எல்லைக்கு வெளியே சென்ற
அழைப்பு எண்..
தவறவிட்ட பேருந்து சென்ற திசையையே
நோக்கும் விழிகள்..
நழுவி பறக்கும்
பலூனை பார்த்து கைஉதறியபடியே
அழும் சிறுவனின் நிலை..
விடுதியில் பெட்டியை திறந்தவுடன்
குடும்ப புகைப்படம் காணும் கனம்..
சுவைக்க நினைத்த உணவு
இல்லையென்பதை கேட்டவுடன்
ஏற்படும் பசியின்மை..
கல்லூரி இறுதி நாள்
கண்ணீரை துடைத்து கை அசைத்து
மறையும் நண்பனின் முகம்..
பறிக்க தடைவிதித்த செடியில்
நேசிக்கும் மலரை தடவியபடியே
நகரும் கையறுநிலை..
மேலும்
உன் பிரிவென்பது
நேற்று பேசி சிரித்த நபர்
இன்று இறந்ததாய் கேட்ட இரங்கல் செய்தி.

சரண்யாசத்தியநாராயணன்



உடைந்துவிட்ட ஒரு காதல்
விரைவாய் ஒட்டிக் கொள்கிறது
என்றால்!!!!

பிரிந்துவிட்ட ஒரு நேசம்
விரைவாய் இணைந்து கொள்கிறது
என்றால்!!!!

கலங்கிப்போன ஒரு நட்பு
விரைவாய் தெளிந்து கொள்கிறது
என்றால்!!

பகைத்துப் போன ஒரு உறவு
விரைவாய் அனுசரித்துக் கொள்கிறது
என்றால்!!!

அங்கே இந்த உலகின் எல்லா
விடயங்களையும் விட
அந்த உறவின் புனிதம்
ஓங்கிக் கிடக்கிறது
என்றுதானே அர்த்தம்!

▫ சுமைல் ஹரீஸ்



வேர்களோடிய பூமி முழுவதும் விரிசல் கண்டு
நீர் பாய்ச்ச வானத்தை குடிக்கிறது உன் பிரிவின்
கண்ணீர்

கண் கொள்ளாமல் தளும்பி நிற்கும் அழுகையை
விதைத்துப் போக வேண்டும் பறவையே நீ எங்கே
இருக்கிறாய்

உதிரத்துவங்கும் சருகிலைகளில் பச்சயத்தின் உயிர்
துணுக்குகள் காற்றில் மறைவேனோ என்று அலை
பாய்கிறது

உன் தளிர் கரங்களின் பூஞ்சிட்டு வருடலுக்காக
யுகயுகாந்திரமாக காத்திருக்கும் கன்னங்கள் தம்
நிறம் இழந்து சுருக்கம் கொண்டு துவளுகிறது

உன் எளிற் சிவப்பில் மின்னும் வெள்ளைப்
பற்களால் கவ்வி கடித்து ஒரு கடிமுத்தம் தா

சிட்டுக்குருவிகள் நம் வீட்டு யன்னலின் கண்ணாடிக்
கதவுகளை கொத்துகின்றன

அவைகளுக்கு சிறகுகள் உதிரும் காலம் உயிர்
பறவை படபடத்து பறக்கும் முன் யன்னலை திறந்து
விடு அவைகள் உள்ளே வரட்டும்

◘ கனியமுதுஅமுதமொழி



வாழ்வு தந்த கசப்புகளிலும்
கடந்து வந்த பாதையிலும்
முட்கள் குற்றிய வலிகளை மயிலிறகால் தடவிய
இதம்தந்தது என்னோடான உன் இருப்புகள்.

நீ இல்லாத நொடிகளை நான் சபிக்கவே இல்லை..
அவைகளும் வரம்பெற்றவை தானே !
உன்னையே நினைவுகளால் மீட்டுத்தருகின்றன..

என்னைச்சுற்றிய உன்வாசனைகளும்
உன்நினைவுகளுமாய்
உன் இருப்புக்கள் இருந்துகொண்டே இருக்கின்றன.

ஆனாலும் உனக்கான காத்திருப்பில்
வினாடிகளெல்லாம் யுகங்களாய்
மாறிக்கொண்டிருக்கின்றன என்பது தான்
ஆகப்பெரும் அதிசயம்...

உன் இருப்பற்ற நேரங்களில்
குளிர்ந்துவரும் மழைத்துளிகள்கூட சுடுகிறது...
சூரியன் எங்கேயோ ஔ□த்துக்கொண்டான்
என்னை சூன்யமாக்கி அமர்த்தவே இயற்கையும்
இப்போதெல்லாம் போராடிக்கொண்டிருக்கிறது.

என் உயிர்ப்பின் இருப்பு அறிய
உன் அருகாமை மட்டுமே எனக்கு வேண்டும்
என்பது நீ அறியாததா...

உனக்காக தவமாய் காத்திருக்கும்நேரங்கள்
வரமானவையா சாபமானவையோ...

ஆனாலும்
அந்த காத்திருப்பின் வினாடிகள் நிமிடங்கள் என
அணுஅணுவாய் நிறைந்து போகிறது உன்
நினைவுகள்.

என் பேரன்பே !
வந்துவிடேன்
என்விழிப்பார்வை ஈரம் வற்றிக்கொண்டிருக்கிறது..

பார்வைகள் தொலைந்த பிறகு
எப்படி என் கண் நிறைக்கும்
உன் வருகை ...

குபோதினி

# குழந்தைகள்



அடித்ததும் பிரம்புகள்
மானசீக மன்னிப்பு
கேட்கின்றன
குழந்தைகளிடம்..
****
சகுனியும், கூனியும்
கபடின்றி சிரிக்கிறார்கள்
குழந்தைகள்
மாறுவேடப்போட்டி!
****
மணியடித்ததும்
குழந்தைகளற்று
அநாதைகளாகின்றன
பள்ளிக்கூடங்கள்!
****
எல்லா பதில்களுக்கும்
சலிக்காமல் கேள்விகள்
வைத்திருக்கின்றன
குழந்தைகள்..
****
ராமன் கால்பட
உயிர்த்தெழுந்தாள் அகலிகை!
பொம்மைகள் காத்திருக்கின்றன
குழந்தைகளுக்காய்!
****
உலகின் மிக உயரிய
விருது
குழந்தைகள் முதன்முறை
கூப்பிடுகிற அம்மா!
****
எத்தனை வாங்கினாலும்
திகட்டுவதேயில்லை
குழந்தையின்
எச்சில் முத்தம்..
****
செம்மொழியை விட
இனிப்பு மொழி
குழந்தைகளின் மழலை..

ஆனந்தகுமார்



திருமண மண்டப
வாகனங்கள் நிறுத்துமிடத்தில்
நிறுத்தியிருந்த மகிழுந்தை
அவரவர்களின் இஷ்டத்திற்கேற்றபடி
ஏடாகூடமாக நிறுத்தப்பட்டிருந்த
பிற வாகனங்களை இடிக்காமல்
மனதிற்குள் சபித்தபடியே
மிக மிக கவனமாக
முன்னும் பின்னுமாக நகர்த்தி
வெளியே எடுக்கையில்
கதவை தட்டி உரிமையாய்
யாசகம் கேட்கிறாள்
மூதாட்டியொருத்தி
இதுவரை முனகலிலிருந்த
கோபம் மொத்தமாய்
அவள் மீது பாய
செய்வதறியாது திகைத்து போகிறாள்
சட்டென்று மனநிலை மாறி
பத்து ரூபாயை அவளிடம் நீட்ட
தயங்கியபடியே வாங்கி கொள்ளுமவளை
“பாட்டி....பை..பை” என
யாரும் சொல்லாமலே
அழைத்து உறவாக்கி
மகிழ்கிறான் குட்டி மகன்
இன்னுமொரு வாழ்வியல் பாடம்
கற்கிறேன் நான்.....

**பிரபுசங்கர் க**



திடீரென்று கொஞ்ச காலையைக் காணவில்லை
திடுக்கிட்டுத் திரும்புகிறேன்
மலரப் போகும் காலையை
அவசர அவசரமாய் பூக்களில் கட்டி
எடுத்துப் போகிறான்
ஒரு பூக்காரன்

அவன் சைக்கிள் கேரியரில்
கட்டப்பட்டிருக்கும்
பூக்கூடைக்குள்
பாந்தமாய் அமர்ந்திருக்கிறது காலை

பனி நிரம்பிய
புத்துணர்ச்சிக் குடுவைக்குள்
துயில் கொள்ளும் காலையை
எப்படி இவனால்
ஒரு சைக்கிளில் கட்டி
எடுத்து வர முடிகிறதென்று
எனக்கு ஒரே ஆச்சரியம்

ஒவ்வொரு வீதிக்குள்ளும்
நுழையும் அவன்
வாடிப் போவதற்கு முன்
காலையை எப்படியாவது
விற்றுவிட வேண்டுமென்ற
முனைப்பிலிருக்கிறான்

காலையை விற்குமவன்
பூவு பூவே னு
கூவிக் கொண்டு தான்
ஒவ்வொரு வீதிக்குள்ளும்
போய் வருகிறான்

அவனிடமிருந்து கொஞ்சம் காலையை
காசு கொடுத்து
வாங்கிச் செல்லுமொருவர்
கடவுள் படத்திற்கு முன்
அதனை போட்டு வைக்கிறார்

யுவதியொருத்தி
ஒரு முழக் காலையை
வாங்கி கூந்தலில்
சூடிக்கொண்டு
அலுவலகம் கிளம்புகிறாள்

காலைகளை விற்றுக்கொண்டு
செல்லுமவன்
கடந்து போன பின்பும்
சிதறிய காலைகளால்
மணத்துக் கிடக்கிறது வீதி

மகேஷ் சிபி



தினமும் கனவில்
ஓஷோவும் ஜே.கேயும் ரமணரும்
வருவார்கள்

அவர்களுக்கு சில வாழ்வியல் தத்துவங்களை
எடுத்துச் சொல்வேன்
கண்ணீர் மல்க கேட்டுக்
கொண்டிருப்பார்கள்

நான் யார்
என்கிறீர்களா

ஒரு பெண்ணை பெண் பார்க்கச் சென்று
ஒரு இளவரசியை நிச்சயம் செய்து
ஒரு மகாராணியை மணமுடித்து
ஒரு ராஜ மாதாவோடு வாழ்கிறேன்

அவ்வளவே.

**மழைக்குருவி**

காதலாகி கசிந்துருகி ஊர் சுற்றி திருமணம் முடிந்து உனக்கு பிடிக்கும் என்று நாய் குட்டியும் எனக்கு பிடிக்கும் என்று காதல் பறவையும் நமக்கு பிடிக்கும் என்று தொட்டி மீன்களுக்கு வாங்கி வாழ துவங்கியதில் சுதந்திரமாக இருக்கின்றன என்னை போலவே அவைகளும் வீடு தாண்டாமல்....

**கதிரவன் வீ**

# காய்ந்த தோலில் மெருகேற்ற சில்லிப்புடன் வந்தாக இருந்தது



அது மழையைக் காட்டி
அதன் ஈரத்தை மணத்தை
அற்புதத்தைச் சொல்லத் தொடங்கியபொழுதில்
கரைந்தேன்

உள்ளுக்குள் பொழியும் மழையாகிப்
போனதால்
உயிர்தளிர்க்கத் தொடங்கியது

தினசரி மழையின் ஈரத்தை உணர்ந்தேன்
மழை வருங்காலம்
போகும் காலம் யாவும்
பதிவிடப்பட்டதில் விடுபட்டது நானெனும் காலம்

மழை
வேறு யாருக்கேனும்
பொழிய நேர்ந்திருக்காலம் எனில் வரத் தயங்கி
இருக்கலாம்

எனக்கே எனக்கான மழையென்ற நினைப்பின்
பிழையாக இருக்கலாம்
காலம் கற்பித்த கனவாகவும் இருக்கலாம்

நாளில் நேர்ந்தது இதுதான்
உடல் நனைத்த ஈரம்
உலரத் தொடங்கியதுதான் வலி
பூஞ்சைகளும் பாசைகளும் படர்ந்த தோலில்
வறட்சியும் வெடிப்புகளும்
உடம்பின் சிரத்தைக்குள் பெரிதாயின
வெடிக்கின்ற நிலமானது உயிர்

மழை என்னிடத்தில் வருவதற்கான எந்த
அறிகுறிகளும் இல்லை என்பதில் பெரிதாக
வருத்தமொன்றுமில்லைதான்
என்றாலும் உயிர் மடங்கிய உடலை நிமிர்த்தத்
தோன்றவில்லை

பின்பொருமுறை அது உண்மையில் வருமெனில்
என்ன செய்ய முடியும்
தள்ளி ரசிப்பதைத் தவிர

தானே மழையாகி
விடலாமெனில்
அதற்கொரு சொந்தமாய்
வானம்வேண்டுமே

▪ பெண்ணியம் செல்வகுமாரி



என் காதலை இயற்கைப் பறித்தாலும்

உனக்காக வாழ்ந்த நான்

வறுமை உடைத்த
செல்களான வாழ்க்கையில்
என்றுமே சிதைந்துவிடவில்லை

கல்லென இறுகிய
மனதில் துளி நீராக உன் மீதான நம்பிக்கை
சொட்டுகள் விழுந்துகொண்டேயிருந்தன

வயதாகிவிட்டப் படகைப்போல
ஒதுக்கப் பட்ட அன்பு

இரக்கமற்ற முதுமை

அனைத்தையும்
கடந்துவிட்டேன்

இயலாமை வறுமை பசி என்னைக்
கொன்றபொழுது
குப்பையில் தூக்கி எறிந்துவிட்டாய்

உனக்குத் தாலாட்டுப் பாடிய வாய்
மண் தின்னுகிறது

உனக்குப் பாலூட்டிய முலைகளை
ஈ எறும்புகள் கடித்துக் குதறுகின்றன

பருவத்தின் வாசலில்
உயிருள்ள பொம்மையாக
திக்கித் திணறியது
காதல் கொண்ட மனம்

கனவுகளின் சுமைகளை இறக்கிவைத்த பொழுது
உறவில் சிந்திய துளிகளால்
மழலையாகக் கொஞ்சினாய்
என் மடியில்

நீ இவ்வுலகத்திற்கு வந்த வழியை
குப்பைகளும் புற்று மண்களும் அடைத்துவிட்டன

கடைசியில்
என் உறக்கம்
கரையான் புற்றுக்குள் கடந்துவிட்டது

என்னை மண் மூடினாலும் மனம் உன்னை
வாழ்த்திக்கொண்டுதானிருக்கும்!

லக்ஷ்மி



அடங்காத மனிதன்
எளிதாக அடக்குகிறது
மண்கலசம்...

**ஐ.தர்மசிங்**

தேநீர்கடை ஒன்றில்
பார்த்து நலம் விசாரித்துவிட்டு
இறந்துபோன அப்பாவுடனான நிகழ்வு ஒன்றினை
நினைவுக்கு கொண்டுவந்து அப்பாவை
பெருமையாக சொல்லிவிட்டு
டீக்கு காசுகொடுத்திட்டேன் தம்பி நீங்க
கொடுக்கவேண்டாமென சொல்லி நகர்கிறார்
அப்பாவின் நண்பர் ஒருவர்
அப்பாவே நேரில் வந்ததாய் ஒரு உணர்வு
எனக்குள்ளே..

**நேசன் மகதி**



சொல் பல்விதமானது
நின்றும் பேசும் கொன்றும் வீசும்
செத்துப் போன சொற்கள்
உடலெங்கும் சிலுவை
அடித்துப் போகிறது

மீண்டும் மீண்டும்
நிகழ்ந்துவிடுகிறது சொற்கொலை
கண்ணாடி துண்டங்களில்
என் சிலுவை பாதுகாக்கப்படுகிறது
மெல்ல மெல்ல
சிலுவையே நானாகியிருந்தேன்

படபடத்து எரியும் முற்றிய மலராய்
வேர்தேடிக்கொண்டிருந்தேன்
வெட்டப்பட்ட கிளைகளில்
கால்கிடக்க என்மேலொரு சிலுவை
என் பின்பொரு சிலுவை

ஒன்று என் தோட்டத்து மரங்களுடையது
மற்றொன்று செத்துப் போன சொற்களுடையது
இரண்டையும் நகர்த்த துடித்து
கழுத்தெழும்பை உடைத்துக் கொண்டேன்
தொங்கியே கிடக்கிறது தலை
இரக்கத்தோடு வந்தவர்கள்
கையிலோ இன்னுமொரு ஆணி
முழுவதுமாக உடைந்தொழுகிறேன்

எண்ணற்ற துளைகளில் வழிகிறது
நின்று பேசும் சொற்கள்
நீண்டு சாயக்கிடக்கும் என்குழலில்
இருக்கலாம்
யாரோ விரும்பும் பேரிசைச் சொல்

▪ கவி. கோ. பிரியதர்ஷினி



சலனங்களின் மீது
சரிந்து இறங்கும் பனித்துளிகளைப்
பறவைகள் கொத்திப் போகின்றன
ஒவ்வொன்றாய் வந்து

வானத்தைக் கொஞ்சம் கடன்வாங்கி
சேலையெனச் சுற்றிக்கொண்டு
அமர்ந்திருக்கும் மலைகளின்
தலையிலிருந்து வழிகிறது
வெய்யிலின் வியர்வை

பறந்து பறந்து அலுத்துப்போய்
மரங்களின் கிளைகளில் அமர்ந்து
ஓய்வெடுக்கும் பறவைகளின் சிறகுகளில்
ஒட்டியிருக்கிறது கொஞ்சம் வானம்

பூமியை மேய்ந்துவிட்டு
பனைமரத்தின் சொரசொரப்பில்
தன்னுடல் தேய்க்கும்
எருமையின் இரு கண்களிலும்
தூங்காமல் விழித்துக்கொண்டிருக்கிறது
வானத்துச் சூரியன்

கூலி வேலைக்குப் போன அம்மாவை
எதிர்பார்த்தபடி
வீட்டு வாசலில் அமர்ந்திருக்கும் மகளுக்காக
இருளாமல் நின்றிருக்கும்
மாலை வெளிச்சத்தின் மீது
மௌனமாய் உதிர்கின்றன
ஊமத்தம் பூக்கள்

■ சௌவி



நீ என்னை வேண்டாம் என்று தூக்கி
வீசிப்போய்விட்டாய்
நீ வெறுத்து விட்டுப்போன அந்த இடத்திலேயே
நான் நின்று கொண்டிருந்தேன்..
உன்னை எப்படி எல்லாம் நேசித்தேன் என்று
மனதிற்குள் அசை போட்டுக் கொண்டிருந்தேன்
நாம் காதல் கொண்டாடிய அந்த நாட்கள் தான்
எத்தனை சுகம் ..
அந்த நாட்களில் உன்மடிமேல் உறங்கி
நீ தந்த அன்பின் முத்தங்களை எல்லாம் நெஞ்
சத்தில் சேகரித்து ஒன்றொன்றாக எடுத்துப்
பார்க்கிறேன்..இப்போதோ அது வலுவிழந்த
சிறகுடைந்த பறவையாய் என்னை பார்த்து
அழுகிறது..
நீ வேண்டும் என்று கேட்கும் என் இதயத்திற்கு
என்ன சொல்வேன்..
நீ மீண்டும் வரமாட்டாய் என்பதை..
காதலின் பெரும் வலியில் நின்று உன்னை ஒன்று
கேட்கிறேன்..
தயவுசெய்து மீண்டும் வந்து விடாதே ..
திரும்ப திரும்ப இதயத்தை கூறுபோட்டு விட
உடலிற்கும் மனதிற்கும் தெம்பில்லை ...
நீ எங்காவது நிம்மதிப்பெருமூச்சு விட்டபடி
வாழ்ந்துவிடு
அந்த சுவாசத்தின் சூட்டில் நான் அழுகையை
காயவைத்துக் கொள்கின்றேன்...

அன்ரனி சாள்ஸ்



அணு விதைத்த அறுவடையில்
ஆள் மயங்கி தடம் பதித்தது
ஒரு பாதை
பாதை வழியே மெல்ல நகரும்
மனப் பந்து
உயிர் மலர்ந்து
திரை நீக்கி
உதிர்கிறது வாழ்க்கை பூ

நரை நகர்த்தி
கரை அமர்ந்து ரசிக்கிறது
மன அலை

கரையருகே அழகான வண்ணத்துப்பூச்சி உச்சி
முகர்ந்தது உவர்க்கும் சமுத்திரத்தை ருசி பார்த்தது

கடலில் தேன் எடுக்க முடியாமல்
கரையருகே
பூவைத் தேடியது

மனமோ வாழ்வைத் தேடுகிறது
இன்னும் உவர்க்கும் சமுத்திரத்தில்

வாழ்வின் பயங்கரம்
அடிமனதின் ஆழத்தில்
நிழலாய் நகர்கிறது

எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டே
யாருடைய நிழலையும் விரும்பாமல்
சுற்றி வருகிறது சூரியன்.

▪ ப.தனஞ்ஜெயன்



ஆள் அரவமற்ற
ரயில் பாதையொன்றில்
அமைதியான தூக்கத்தில்
அந்த முதியவர்

உயிர் மூச்சின் சுவாச ஒலி
அத்தனை தாறுமாறாகக் தாக்க
விழி மூடிய நிலையில் தனித்திருக்கிறது
அவர் உயிராடும் உடல்

ஆங்காங்கே கவலையின் கீறல்கள்
இயலாமையின் வடுக்கள்
புறக்கணிப்பின் எச்சங்கள்
வாழ்ந்து முடித்த ரணங்கள்
விடியலைத் தேடும் நப்பாசைகள்
விட்டுக் கொடுத்த கௌரவங்கள்
பெரு மழையென தலை காட்டிய சிக்கல்கள்
விடாப்பிடியாக உடம்பைத் துளைக்கும்
குளிர் காற்று..
சட்டெனப் பயம் காட்டும்
நாய் ஒன்றின் பயங்கரக் குரைப்பு
பட்டென ஒட்டிக் கொள்ளும்
புழுதிகளின் ஆர்ப்பாட்டம்
திடீரெனப் பெய்திடும்
சில்லென்ற மழைத்துளிகளின்
மொத்த சில்மிஷங்கள்

இத்தனைக்குள்ளும்
அப்பால் நகர்ந்திடு எனும்
கம்பீரக் குரலில்
கண்விழித்துப் பார்க்கும்
அந்த முதியவரின் கண்களுக்கு
விகாரமாய்த் தெரிகிறது
மிடுக்காய் தன் மீசையை
முறுக்கிக் கொண்ட ஒரு பயணியின் முகம்..

அவனது பாதணிகளுக்குள்
வசப் பட்ட தன் கால்களை
விடுவித்து நிமிர்கையில்
முதியவரின் மடி சேர்ந்து

வலிக்கும் அவர் கால்களை
மெல்லமாய் தடவிக் கொடுக்கிறது
அந்த வீதியோரத்தில்
தனித்து விடப்பட்ட
நாய் ஒன்று..

◘ ஷப்ரா இல்முத்தீன்

# பறவை மனம்...



எங்கிருந்து பறந்து வந்ததோ

கிளையில் அமரும்போது களைத்துப் போயிருந்தது
சிறகை மடித்து வைக்கும்போது
சோம்பல் தெரிந்தது

அதன் அருகே பழுத்த கனி பவளச் சிவப்பில்
ஜொலித்தும்
அடித்த காற்றில் உதிர்ந்த இலையைப்
பார்த்துக் கொண்டே இருந்த பறவை
பழத்தைத் தின்னாமல் பறந்து விட்டது

பறவையின் சோகம் பற்றித் தெரிய
அதன் மொழி அவசியமில்லை
ஏனோ எனக்கும் அன்று
சாப்பிடப் பிடிக்கவில்லை...!!!

கிறிஸ்டினா அருள்மொழி

# நினைவின் முட்கள்



மேலக்காட்டு பச்சை மேய்ந்த ஆடுமாடுகளை
மாலையில் கிடையில் அடைத்து விட்டு
தேய்ந்த தன் செருப்பில் நிறைந்து தைத்த
கருவேல முள், கள்ளி முள்
காக்கா முள், இலந்தை முள் என ஒவ்வொன்றாக
பிடுங்கி எறிவார்
குளிருக்கு மூட்டிய தீயில் ராசாத்தேவர்.
பின்னொரு நாளில்
மேலக்காட்டு வடலிகள் காற்றாலைகாரனுக்கும்
ஆடுமாடுகள் மேலப்பாளைய வியாபாரிக்கும்
கைமாறியிருந்தது.
இப்போதெல்லாம்
காற்றாலைக்காரன் போட்ட தார்ச்சாலையில்
தேயாத செருப்போடு நடக்கும் ராசாத்தேவருக்கு
சுருக் சுருக்கென்று குத்துவது
நினைவின் முட்களாகத்தான் இருக்கும்.

மணி அமரன்



அடர்கருமை இருள் போர்த்தியபடி
அந்த அறையில்
அவனுக்கருகில் படுத்துக் கிடந்தது
அவனின் நீண்ட ராத்திரி

வெளிச்சம் தன்னை இழந்து
இருட்டைப் பிரசவித்து
அதன் அழகை எல்லாம்
இருளாக்கிப் பூசிக் கொண்டிருந்தது.,

ராத்திரி விளக்கின் ஊதா நிறம் குடித்து
அது அந்த அறையெங்கும்
மின்மினியாய் மினுக்கி அலைந்தது

அவனோ அந்தக் கொடும் இருட்டைப்
போர்த்தியபடியே
பஞ்சு பறக்கும் படுக்கையில்
நாளான எண்ணெய்ச் சிக்கின் நாற்றம்
பழக்கியவனாய்
அவன் உயிரை வளர்த்தியபடி
அறைக்குள் கிடந்தான்
செந்தபின்பு கிடைக்கும் இடம்
பழக.......

**தங்க.ஜெயபால்(ஜோதி)**



மயானக் குறியீடாய்
கொட்டிக் கிடக்கிறது
பாதையெங்கும் பூக்கள்

வாய் பிளந்தால்
அனைவரையும் விழுங்கும் பேராபத்தைதான்
வன்மமின்றி அழைக்கிறோம்
“பூ” கம்பம்

விற்பனையாகாமல்
வீதியோரம் கிடந்தார்
சத்திய சோதனை காந்தி
நடைபாதை புத்தகக்கடையில்

எனதூர் தண்டவாளத்தைக் கடந்து
இரயில் போய் கொண்டிருக்கிறது
என் கடந்த காலங்களை ஏற்றியப்படி

செத்தானா? இருக்கானா?
தானமிடாமல் அறிய முடியாது
இறைவனை

எந்த நிலவுமில்லை,
எந்த நட்சத்திரங்களும் இல்லை,,,
நள்ளிரவு வாங்கிய சுதந்திரத்தில்

தந்திரம் அறிந்த மனசு
தூக்கத்தைக் கூட வியாபாரமாக்கும்

அச்சு இயந்திரங்களில்
நசுங்கிய பிறகுதான்
உயிர் பிழைக்கிறது சொற்கள்

குழந்தை அழுததும்
தாய் அதட்டுகிறாள்
கொஞ்சம் பொறு பாலூறட்டும்

ஒரு மெழுகுவர்த்தியாவது
வாங்கிக் கொள்,
நீ ஏற்றவில்லையென்றாலும்
பார்வையற்றோருக்கு
ஒளி கிடைக்கும்

சுயம்பு

# எதைச்சொல்லி எழுப்புவது



படுக்கையிலிருந்து எழுகிறேன்
உடனழைத்துச்செல்ல
கூடவே உறங்கும் கனவையும்
எழுப்புகிறேன்
என் குரலுக்கு எழ மறுத்து
புரண்டு படுத்து தூங்குகிறது அது
உசுப்பி எழுப்பியபோதும்
சோம்பலுடன் முகஞ்சுளித்து
நாவால் முகம் நக்கி உறங்கும்
பூனைக்குட்டியைப்போல்
தூக்கத்தை தொடர்கிறது...
கனவுக்கும் எனக்கும் நடுவே
மழையற்று வெடித்த நிலத்தின்
வெறுமைகள் எப்போதும் குடியிருக்கிறது
மணிப்புறாவின் கழுத்தை போலிருக்கும்
கனவின் மென் இறகு பிளந்து
சதைக்குள் தைக்கிறது அம்புகள்
ஒவ்வொரு நாளின் விழிப்பிலும்
நிர்பந்தங்கள்
கனவின் எதிர் திசை நோக்கியே
பயணிக்கச்செய்கிறது...
அரண்மனை தூலங்கள் சரிந்து
காலவோட்டத்தில்
பெருங்கோட்டைச் சுவர்களின்
மண்ணுதிரும் பலவீனத்தின் வாசனையை
பருகத்தொடங்கும் கனவுகள்
இறந்த மீனின் செதில்களாய்
பாதங்களுக்கு முன் இறைந்து கிடக்கிறது
நிறைவேற்ற முடியாமல்
கனவும் நானும் நினைவுகளுக்குள் மட்டுமே
கைகுலுக்க வேண்டியிருக்கிறது
மனதின் அறையெங்கும்
இருட்டை பூசும் கனவுகளுக்கு
வெளிச்சமிட நாணயங்களை தேடி
சலிப்படைகிறேன்...
எப்படி எழுப்பினாலும்
பள்ளி செல்ல விரும்பாமல்
இறுக்கமாய் கண்மூடி உறங்குவதுபோல்
பாவனை செய்யும் சிறுவனைப்போல்
அடம்பிடித்து நடிப்பதால்
எதைச்சொல்லி
எழுப்புவதென்று தெரியாமல்
இப்போதெல்லாம் சப்தம் போடாமல்
படுக்கையிலேயே
விட்டுவிட்டு வந்துவிடுகிறேன்
என் கனவுகளை...

■ சந்துரு



நாமாய் அழைத்தால்தான்
சொல்கிறார்கள்
உன்னைத்தான் அழைக்க நினைத்தேன்
என்பதாய்

நாமாய் தேடிச்சென்று முன் நின்றால்தான்
சொல்கிறார்கள்
நானே உன்னை தேடிவரத்தான் இருந்தேன்
என்பதாய்

தாளமாட்டாமல்
மறந்து விட்டாயா? என குறுஞ்செய்தி இட்டால்தான்
சொல்கிறார்கள்
உன்னைப்பற்றித்தான் நினைத்துக்கொண்டிருந்தேன்
என்பதாய்

உண்மையில்
யாருக்கும்
யாரையும்
நினைத்துக்கொண்டிருக்கவெல்லாம்
நேரமே இருப்பதில்லை

அவரவர்க்கு அவரவர் வேலை
அவரவர்க்கு அவரவர் தேவை

எப்போதேனும்
எதேச்சையாய்
எதிர்பட்டுக்கொள்ளும்போது
கூறிக்கொள்ளலாம்
“இப்போதுதான் உங்களை
நினைத்துக்கொண்டிருந்தேன்”
என்பதாய்

அதுவே சமாதானம்
அதுவே ஆறுதல்

அதைத்தவிர
யாரிடமும்
யாருக்கும்
இக்காலத்தில்
எந்தத் தேவையும் இல்லை
எந்த எதிர்பார்ப்பும் இல்லை!!!

■ ரிஸ்கா முக்தார்



நெடுந்தூர வான்சாலை
நீ
தோன்றி
நான் மறைகிறேன்
பூமியில் திருவிழா.

பிரபஞ்சம்
சுவைக்க வேண்டும்
தள்ளுவண்டியில்
ஆதாம் ஏவாள்
ஆப்பிள் தீர்ந்தது.

காற்றுக்கு சுரமில்லை
கொஞ்சம்
பேசிட வேண்டும்.

தீபம் நெழிகிறது
உயிர் துடிக்கிறது .

விழிக்கு தடம் தெரியும்.

மனமொரு
தேநீர் மேசை
இருவர் அருந்திய தேநீரிலும்
பல சுவைவாதம்.

பூமி திரும்பி போக முடியாது
எங்கு
சுற்றியும் வானம்.

குமரன்விஜி



இந்த வீட்டில் தான் நான் பிறந்தேன் ஆனாலும்
இந்த வீடு எப்போதும்
எனக்கான வீடாக இருந்ததில்லை

எனது கற்பனை வீட்டை
மரங்களுக்கு நடுவே நிர்மாணித்திருந்தேன்

அந்த வீட்டில்
பறவைகளுக்கும் வானத்துக்கும்
தடுப்புச் சுவர் இல்லாத
தனியறை ஒதுக்கியிருந்தேன்

நட்சத்திரங்கள் வந்து போக
நான் ஏற்படுத்தியிருந்த பாதையைக் கூட
புறம்போக்கு இடத்தில் இருப்பதாக கூறி
அப்புறப்படுத்திவிட்டார்கள் அதிகாரிகள்

நல்ல வேளை கையில்
நான் வைத்திருந்த ரோஜாவை
யாரும் பார்க்க வில்லை .
பார்த்திருந்தால்
காயம் உண்டாக்கும் ஆயுதம் வைத்திருந்ததாக
சொல்லி
கைது செய்திருக்கவும் கூடும் !

உஸ்மான்

# தவணைக் கனவு



திணிக்கும் துணிகளால்
வயிறு உப்பித் தவிக்கும் அலமாரி
பலமுறை கால்களை மாற்றியதால்
நடுவில் வளைந்து
நக்கல் பண்ணும் கட்டில்
காயில் மாற்றி மாற்றி
களைத்துப்போனதால்
மெதுவாய் நகரும் மின்விசிறி
சில மாதங்களாகவே
சிம்னி விளக்காய் சிணுங்கும்
எரிவாயு அடுப்பு
இனியும் ஆகாதென சொல்லப்பட்டு
கருப்புவெள்ளை
புள்ளி காட்டும் கலர் டீவி
எல்லாமே
தவணைகளில்
வந்துசேர்ந்து நொந்துபோனவை.
குளிக்கும்போது கருத்துவிடுமென
கழற்றிவைத்த.
கழுத்துச் சங்கிலியை மாற்றி
குண்டுமணித் தங்கமாவது
வாங்கித் தரவேணுமவளுக்கு
அடுத்த தவணையில்.

காசாவயல் கண்ணன்



ஓங்கியுயர்ந்த இமயத்தையே
உள்ளுக்குள் பதுக்கிய
பெருங்கடலென்கிறார்கள்...
நிலத்தினும் பெரிதாய்
விரிந்து பரந்த பெரும்பரப்பு உனதென்கிறார்கள்...
குறையா மழைபொழிந்து
வாழ்வளிக்கும் மேகங்களுக்கே
வாழ்வளிப்பது நீயாமே?...
எத்தனையோ பெருமையிருந்தும்
சிறு கர்வமும் சூடாது
இத்தனை மென்மையாய்
எப்படி முடிகிறது உன்னாலே?

**வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்**

பிடித்த ஒருவரின்
ஆசையை நிறைவேற்ற
பெரும்பாடு பட்டிருக்கிறேன்...

பிடித்த ஒருவரின் கவலையை
என் கவலையென்று இரவெல்லாம்
சுமந்திருக்கிறேன்...

பிடித்த ஒருவரின் மகிழ்ச்சியான
தருணத்தை நான் இன்னும்
மறக்காதிருக்கிறேன்...

பிடித்த ஒருவரின் நிம்மதிக்காக
என் நிம்மதியை குலைத்து
அலைந்திருக்கிறேன்...

இப்போதும் பிடித்தவர்கள்
என்னை யாரோவென
கடந்து செல்கையில் வெறும்
வழிப்போக்கனாய் வாழ்ந்து தொலைகிறேன்...

**அலர்மேல்மங்கை**



அள்ள முடியாப் பெருமழை பெய்யப்
பெருங்கோபத்தில்
ஓடிக் கொண்டிருக்கிறது நதி.

வெட்டிவிட முடியாச் சோகத்தில்
மூழ்கிக் கொண்டிருக்கிறான்
முழங்கால் வரை சேறு பூசியவன்.

கரையேற முடியாத் தத்தளிப்பில் தவிக்கிறாள்
அவள்.

ஒரு அதட்டலுக்கு
ஊறிய கைகளை உள்ளே இழுக்கிறாள்
நோக்காட்டுச் சிறுமி.

உலர்தலுக்கு வழியின்றி
உள்ளேயும் புழுங்குகிறது
புரிதலற்ற ஈரம்.

இன்னும் நீடிக்குமென்கிற
அறிவிப்பின் மீது
லேசாய்ப் படரும் மென்கதிரை
மறுகணமே புணர அழைக்கிறது
ஒரு கரும்பேய்.

மழைப் பாடலும் நொறுக்குத்தீனியுமாய்க் கழிந்த
பால்கனிச் சுவரிலிருந்து
பொங்கி வழிகிறது புஸ்வாண மழை.

■ மா.காளிதாஸ்



நீ
தானமிட்ட தேநீர் மிடற்றில்
கொஞ்சம் வெப்பம் பிடிக்கிறது
இந்த மழைக்காலை

முத்தத்தில் முகிழ்த்தி
நீ சுழலவிடும் கிரகங்கள்
பொழுதுகளை இயக்கிப் புதுக்குகின்றன

நட்சத்திர இரவுகளில்
கீற்று தரிக்கும் பிறை
பூரணத்தை கனவிக்கிறது

உயிர்ச்கூட்டில் உழலும் உலகின்
கள்ளமற்றக் கனவெலாம்
தாய்மையே உன் தரிசனம்தான்

**கோ. பாரதிமோகன்**

மழைக்காலத் தவளையாய்
மனக்குளமெங்கும்
கூச்சலிடுகிறது உன்
நினைவுகள்.....

யாரும் காணாமல்
அடிக்கடி உன்னை
தழுவிச் செல்லும் காற்றுக்கு
உருவமில்லாதது வசதியாய்
போயிற்று....

இரவெல்லாம் ஒளிவீசும்
நட்சத்திரங்களுக்கு
விடிந்ததும்
தாக்குப்பிடிக்க
முடிவதில்லை
உன் மூக்குத்தியின்
முன்னால்.....

**நித்யா சபரி**

கிழித்த காற்றைத் தைக்க
நேரமில்லை
வாயில் இரையுடன்
கூடு திரும்பும் பறவைக்கு

**பூங்கோதை கனகராஜன்**

# முரண்கள் தேங்கும் கவிதை



மவுனம் கரைக்கும் பேரிரைச்சல்
ஊமையாகி நிற்கிறது
பெரும் சூறாவளிப் பொழுதொன்றில்
ஒவ்வொரு சொல்லையும் முனகிக்கொண்டு

உறங்கியும் உறங்காமல்
நெளிகின்றன
மழையக நினைவுகள்
விழிகளை மூடி விழித்துக்கொண்டு

எப்போதும் இழைந்திருக்கும்
தாம்பத்ய இறுக்கவிலகலாய்
முரண்கள் தேங்கிய கவிதையில்

■ ரா.ராஜசேகர்

என்னோடே இருக்கிறாய்
சிரிக்கிறாய் ரசிக்கிறாய்
உண்கிறாய் உய்கிறாய்
பகர்கிறாய் பகிர்கிறாய்
படுக்கிறாய் புரள்கிறாய்
அணைக்கிறாய் பிணைக்கிறாய்
பயணிக்கிறாய்
“உன்னை விட்டு விலகுவதுமில்லை
உன்னைக் கைவிடுவதுமில்லை”யென
தேவதூதனாய்
வாக்குக் கொடுக்கிறாய்
கனகாம்பரத்தைச்
சூடித் திரிகிறேன் நான்.

■ காயத்ரி ராஜசேகர்



ஆளுக்கொரு கதையை
கைகளில்
வைத்துக் கொண்டு அலைகிறார்கள்!
கதைகளை
மென்று தின்னும் வேளையில்....
இனிப்பென ஒட்டிக் கிடக்கிறது ஒன்றிரண்டு
பருக்கைகள்!
நிகழ்காலத்தின் சன்னல்கள்
அறைந்து சாத்தியிருப்பதாய் பெரும் பிரமை!
இல்லாத கதவுக்குத்
தாழ்ப்பாளைப் பூட்டிக் கொண்டு
கதவைத் தட்டுகிறவனை எதிர்பார்த்து அச்சத்தை
அறைக்குள் நிரப்ப...
நான் என்பது
நடந்து சென்று நான்கு பேரிடம் ‘நான் நான்தான்’
என்ற மொழிதலில்
உள்ளுக்குள்ளிருக்கும் பூனை கண்களையுருட்ட,
இடைவணிகன்
ஹேஷ்யங்களால் காலத்தையுருட்டி
கையளிக்கிறான்!
கட்டங்களை நகர்த்திக் கொண்டு
ஒவ்வொருவராக வழித்தேடி அலைகிறார்கள் !
இன்னமும் கதை முடியவில்லை!

▫ முகமது பாட்சா

## தலைக்கு மேல் உரசிச்செல்லும் பறவையின் நிழல்

தலைக்கு மேல் உரசிச்செல்லும்
பறவையின் நிழலொன்று
ஞாபகமுற்ற நெஞ்சை சிறகு விரிக்க சொல்கின்றது

முகில்யானை கூட்டங்களின்
காலடியில் விம்மி மிதிபடச் சொல்கிறது

உருத்தெரியாமல் மழையாய் பொழிந்து
பின்பு
மறைந்து போ என்கிறது

தூக்கனாங்குருவி கூட்டுக்குள் உருளும்
வெண்முட்டைகளுக்கு
இரவெல்லாம் காவல் இரு என்கிறது

ஒரு கோடையில் தண்ணீரற்ற துளசி செடியாய்
பட்டுப்போ என்கிறது

உறங்கவிடாத இராத்தெரு நாய்களின்
சிநேகிதத்தை வளர்த்தெடு என்கிறது

இரவுத் திரைச்சீலைகளை பித்தேறி கிழித்துவிடாமல்
நிம்மதியாய் அவைகளை
காற்றில் அசையவிடு என்கிறது

▫ தங்கேஸ்



வெறுப்பின் உச்சகட்டம் நம் பிரிவு..
பார்க்க மாட்டேன் என நானும்
நினைக்கக்கூட மாட்டேன் என நீயும்..!!
.
அடக்கிவைத்த அத்தனை
கோபங்களையும்
கொட்டித் தீர்த்துவிட்டுக் கிளம்ப,
அந்நொடிமுதல் ஆரம்பித்தது
நாமில்லா நமது வாழ்க்கை...
.
சுதந்திரம் கிடைத்ததென..
கட்டுப்பாடுகள் இல்லையென..
கடிவாளங்கள் அறுந்ததென..
அடிமைத்தனம் முடிந்ததென..
போலியான சமாதானங்கள் நமக்குள்ளே!!

நிம்மதியாய் இருக்கிறோமென
நமக்கு நாமே சொல்லிப் பழக்கினோம்..
மாற்றங்கள் நம் அலைபேசி எண்களிலும்
மின்னஞ்சல் கடவுச்சொல்லிலும் புகுத்தினோம்,
அதுவே மனதிற்கும் என்ற நாடகமாய்..!!
.
வந்துபோகும் நினைவுகளையும்
வலுக்கட்டாயமாய் தள்ளிவிட்டு
கெட்ட கனவுகள் என்றும்
கறுப்பு அத்தியாயம் என்றும்
பொய்யாகப் பொய்யுரைத்தோம்....
.
எல்லாம் சரிதான்.. ஆனாலும்..
நாம் பேசியமர்ந்த
இடத்தைக் கடக்கும் போதும்...
உனக்குப் பிடித்த பாடல்
காதில் விழும்போதும்...
உன் விருப்ப நாயகனைத் திரையில்
பார்க்கும்போதும்...
உனக்குப் பிடித்த உணவை
உண்ணும்போதும்...

ஏன்.... இந்த வரிகளை எழுதும்போதும் கூட..
சட்டென ஸ்தம்பித்து உண்டாகும்
ஏனோ ஆழ்மனதில் ஒருவித வலி!!
.
இது தான்.. இப்படித் தான் என்று
தேற்றிக் கொண்டு சகஜமானாலும்,
ஒரு சில கேள்விகளுக்கும் வலிகளுக்கும்
என்றைக்குமே விடை கிடைப்பதில்லை..!!

மனிதர்களுக்கு
அரிதாரமிடலாமே தவிர
மனதிற்கு எப்போதும் முடிவதில்லை...
நினைத்துப் பார் என்னை
நீயும் என்றாவது ஒரு நாள்...

▪ சிவக்குமார்



வானம் இருட்டிக்கொண்டு வருகிறது.

வானிலை அறிவிப்பில்
காற்றழுத்த தாழ்வு நிலை
மிகு காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி
இடியுடன் கூடிய கனமழை வரப்போவதை சற்றே
வருத்தத்தோடு அறிவிக்கிறார்
எப்போதும் புன்முறுவலோடு
செய்தி வாசிக்கும் பெண்மணி.

தொலைக்காட்சியின்
விளம்பர இடைவேளைகளுக்கு நடுவே
இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவதை அவசரக்குரல்
கொண்டு கூறும்
களச் செய்தியாளரின் குரல்
நகரின் பதட்டத்தை
மேலும் அதிகமாக்குகிறது.

ஏற்கெனவே பெய்த மழையால் தேங்கிய நீரைப்
பார்த்து
இன்னும் அதிகமாகிறது அச்சம்.

என் இயல்பு வாழ்க்கையோ
நீ பிரிந்து சென்றதுமே பாதிக்கப்பட்டுவிட்டது.
அதை நான் எங்கு சென்று அறிவிக்க?
யாரிடம் முறையிட?

கன்னத்தில் சாரல் தெளித்து
விளையாட்டு காட்டும் இந்த மழையும்
நம் வீட்டு சாளரத்தில்
மழைக்கு ஒதுங்கிக்
காதல் புரியும் ஒரு ஜோடி மாடப் புறாக்களும்தான்
இப்போதைய என் ஆறுதல்.

அன்பே இது இன்னொரு மழைக்காலம்.

■ பிருந்தா சாரதி



திருமண மண்டபத்தில்
நாம் கரம் கோர்த்துக் கொண்டபோது
கொட்டத் தொடங்கிய மழை
இன்றும் விடாமல்
நம்மை
நனைத்துக்கொண்டே இருக்கிறது.

என்னை மனைவியாக்கி
உன் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறாய்
என்ன நினைத்ததோ ஆகாயம்
தெரியவில்லை...
மகிழுந்தின் கண்ணாடியைச் சுற்றித்
திரை சீலையாகி
நம்மை மறைத்துக்கொண்டது.

வீட்டு வாசலில்
நான் நனையாமல் இருக்க
வானவில்லை ஏந்திக்கொண்டாய்.
அந்தக் குடைக்குள்
மெல்லத் தூறிக்கொண்டிருந்தது
உன் அக்கறைகள்.

அன்றிலிருந்து
அஃதெப்படி
உனக்குத் தகவல் தெரிவிக்காமல்
வருவதே இல்லை
இந்தக் குறும்பு மழை ?

வெள்ளத்தைத்தானே கூட்டிவரும்
பருவமழை ?
மேகங்களையுமா
அறைக்குள் அழைத்து வரும் ?
உனக்கும் மழைக்கும்
அப்படியென்ன ஓர் ஒப்பந்தம் ?

தொடர் மழையின் பரிசாக
இதோ ...
நமக்குப் பிறந்திருக்கிறது
ஒரு சிறு ஆகாயம்...

வழக்கம் போல
இன்றும்
பிஞ்சு விரல்களைத் தீண்டி
சிலிர்த்துக் கொள்ள
சன்னலை
எட்டிப்பார்த்துக் கொண்டிருக்கிறது
நம் அன்பிற்குரிய
அதே மாமழை...

தி.கலையரசி



பூமியை தின்பதற்காக
வானம் மேயும் பறவையை
யார் பார்த்தீர்கள்

கிளையின் விரலை
பற்றிப் பறந்த பறவை
தன் களைப்பை
விட்டு விட்டு
வெளியேறுவதை
பார்த்தீர்களே
தன் விரல்களால்
மரத்திடம்
சொல்லி விட்டுப் போன
நம்பிக்கை வார்த்தைகளை
காற்றும் கேட்டிருக்க
வாய்ப்பில்லை

றெக்கை பிளிரும்
கடவுள்கள் அவைதான்
பொது உலகத்தின்
உற்சாகங்களது
கரியமிலங்களை
பிராண சக்தியாய்
ஆக்கித் தருபவை
விரிந்து வாழட்டுமந்த
காற்றின் விந்துகள்.

**▫ சம்பத் கிருஷ்ண குமார்**

இரக்கமற்ற மழை
இரண்டு ஓடுகளை
இடம்மாற்றியது
நேற்றைய கவலையாக இருந்தது.
இந்த இடைவெளியில்
பாதி நிலவே தெரிவது
இன்றைய கவலையாய் இருக்கிறது...

**▫ தீபிகா நடராஜன்**

பிங்க் நிறப் பூக் கொத்து அந்தரத்தில்
அசைந்தாடுகிறது
அதன் மேல் பகுதி வெய்யிலுக்குப் பிடித்திருக்கிறது
கீழ்ப் பகுதி நிழலுக்குப் பிடித்திருக்கிறது
எனக்கு அதன் நிறம் பிடித்திருப்பதாக உணர்கிறேன்.

**▫ ஃபஷ்றி**

# ஆழ்கையில் இரை மீட்டும் ஆன்மா



விழித்திருக்கிறது இரவு

சிலசமயம்
வேரறுக்கும் பெரு வெள்ளமாய்

சிலசமயம்
வேரூன்றி வெடித்தெழுந்துக்
கிளை விரிக்கும்
பரட்டையாய்

சிலசமயம்
அதிவேகமானதொரு புதைமணல்
மூழ்குதலாகவும் இருக்கிறது

மேலும்
இழை பிரியும் மென் மழையாய்
சத்த யுத்தங்களால்
மீட்கையில்

நிலைகுலைந்து
ஆழ்கிறேன் முழுதுமாய் மூழ்கி

அக்கணங்களில்
ஆன்மா இரை மீட்டுகிறது
உனது குரலையும்
சேர்த்தழைக்கொண்டு.

◘ ப்ரியா பாஸ்கரன்

இறக்கப்போவது இரண்டொரு
நாழிகையில்
என்றாலும்
பறக்கத்துடிக்கும் ஈசலுக்கும்
ஒருவகையில் –
மனிதனின் சாயல்...!

◘ அழ. இரஜினிகாந்தன்

# கற்பனைவாதி



நான் கற்களுக்குப்பிறக்கவில்லை
கற்களின் மேல் பிறந்திருக்கிறேன் என்கிறாள்
மேகத்தோடு மேகமுராய்ந்து
கடவுள் உண்டானதாக அதனால்
சூரியன் ஒளியெழுப்புவதாக
வெண்நிறப்பூக்களைப் பறித்துக்கொண்டே
என் தாய் உசாவுகிறாள்

ஜன்னலை அகலத்திறந்து
தோட்டத்துப் பூக்களின் இசையைக்கேட்கிறேன்
மனம் பேதப்பட்ட ஒரு பைத்தியக்காரனின்
சட்டைப்பைக்குள் உலகமிருக்கிறதாய் நான்
நம்புகிறேன்

கண்களுக்குப் புலப்படாத
நீதிமன்றத்தில் நான் குற்றவாளியாக
நிறுத்தப்பட்டிருக்கிறேன்
காலையில் காகம் என்னையழைத்து எச்சரிக்கை
விடுத்தது
என் பாவங்களையெல்லாம்
தூதனொருவன் அவர்களின்
ஏற்பு மொழியில்
மொழிப்பெயர்த்துக்கொண்டிருக்கிறான்

மரணக்கதவின் சாவியை
திருடுவதற்கான திருடன்
இன்னும் பிறக்கவில்லை
அதற்கான பயிற்சியும்
இதற்கு முன் யாரிடமும் அளிக்கப்படவில்லை

இடிமழைக்குப்பிறகு வரும்
காற்றின் வேகம் குறையவில்லை
உடல் குளிர்ந்தது
சாவின் சன்னிதானம் திறக்கப்பட்டது
எனக்கு முன் நின்ற பாவிகளின்
நியதிகள் எரிக்கப்பட்டன
உடைந்த மேகத்துண்டுகளை
காண்கிறேன்
ஒன்றோடு ஒன்று உராய்ந்திருக்கிறது
கடவுள் இன்னும் பிறக்கவில்லை
உலகம் என் கையை விட்டு
மெதுவாய் செல்கிறது

ஒருவனுக்கு வயோதிகக்காலமென்பது
ஒருவனுக்கு
பருவக்காலமாகிறது
எனது கடந்தகாலத்தை வருங்காலத்தோடு
ஒப்பிடுகிறேன்

காலம் ஒரு முற்றுப்பெறாத விலங்கு
காலம் எப்போதும் யாருக்கும்
காய்ப்பதுவுமில்லை பூப்பதுவுமில்லை

▪ ராம்பெரியசாமி

படைப்பு

சமூகத்தின் இணைப்பு



# சுதந்திரக் கூத்து

புது சரித்திரம்

விரைவில்..